**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

**முன்னிலை: முனைவர். ரெ. இளங்கோவன்**

**ந.க. எண் 021112 / இ / இ3 / 2018, நாள். 6.04.2018.**

**பொருள்:** பள்ளிக் கல்வி – சீருடைகள் – 2018–19ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு புதிய வண்ணத்திலும் வடிவமைப்பிலும், மாணவர் மனம் கவரும் வகையில் சீருடை அறிமுகப்படுத்துவது – அறிவுரைகள் வழங்குவது – சார்பு.

**பார்வை:** சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் சீருடை மாற்றம் செய்திட தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கொண்ட குழு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அளித்த பரிந்துரைகள்.

******

தமிழகத்தில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அரசால் விலையில்லா சீருடைகள் இரண்டு செட் Light Brown மற்றும் Maroon நிறத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

2. அனைத்து அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு Light Brown and Maroon என்ற நிறத்தில் சீருடைகளை மாணவ மாணவியர் அவர்களது சொந்த செலவிலேயே பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

3. இந்நிலையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கு ஒரே வகையான, வகுப்புகளுக்கு ஏற்றவாறு, மாணவ மாணயர்களின் மனம் கவரும் வண்ணமும் அவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்தும் வகையிலும் 9 & 10 வகுப்புகளுக்கு ஒரே சீரான சீருடையும், 11 & 12ஆம் மேல்நிலை வகுப்புகளுக்கு ஒரே சீரான சீருடையும் அறிமுகப்படுத்திட பார்வையில் குறித்துள்ள சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான தலைமையாசிரியர் / ஆசிரியர்கள் கொண்ட குழு பள்ளிக் கல்வி இயக்குநரிடம் அறிக்கையை சமர்பித்துள்ளனர்.

4. அவ்வாறு 9 & 10 இடைநிலை வகுப்புகளுக்கு ஒரே சீரான சீருடையும், 11 & 12ஆம் மேல்நிலை வகுப்புகளுக்கு ஒரே சீரான சீருடைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவ மாணவியரை எளிதில் அடையாளம் கண்டுவிடலாம் எனவும் மாணவ மாணவியர் எவ்வித சாதி, மத, சமுதாய பேதமின்றி ஒற்றுமை உணர்வுடனும், சகோதரத்துவத்துடனும், பாகுபாடு ஏதுமின்றி ஒன்று சேர்ந்து கல்வி பயிலும் வகையில் வாய்ப்பை ஏற்படுத்திடும் என சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான குழு தெரிவித்துள்ளது.

5. எனவே 2018–19ஆம் கல்வியாண்டு முதல் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளியில் 9 & 10 மற்றும் 11 &12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு கீழ்கண்ட நிறத்திலான சீருடைகளை எப்போதும் போல சொந்த செலவிலேயே வாங்கி பயன்படுத்திட தகுந்த அறிவுரைகளை சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு வழங்கிட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 9 & 10 ஆம் வகுப்புகளில் பயின்று வரும் மாணவ மாணவியர்களுக்கு சாம்பல் நிற வண்ணத்தில் முழுக்கால் சட்டையும், இளஞ்சிவப்பு நிற கோடிட்ட மேல் சட்டையும், மாணவிகளுக்கு கூடுதலாக இதன் மேல் சாம்பல் நிற கோட்டுடன் அமைந்த சீருடை.

2. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11 &12 ஆம் வகுப்புகளில் பயின்று வரும் மாணவ மாணவியர்களுக்கு கருநீல நிற வண்ணத்தில் முழுக்கால் சட்டையும், கருநீல நிறக் கோடிட்ட மேல் சட்டையும், மாணவியர்களுக்கு கூடுதலாக இதன் மேல் கருநீலநிறக் கோட்டுடன் அமைந்த சீருடை.

இத்துடன் புதிய சீருடையின் மாதிரி வண்ணப் புகைப்படம் இணைத்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது. இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றதற்கான ஒப்புதலை உடன் இவ்வியக்ககம் அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :** புதிய சீருடையின் மாதிரி
வண்ணப் புகைப்படம்

**பள்ளிக் கல்வி இயக்குநர்**

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.